உ

சிவமயம்



காலஞ்சென்ற

திருமதி லலிந்தினி கிருஷ்ணதாசன்

# Memoir of the Late Mrs. Lalinthini Krishnathasan

# நினைவுமலர்

15.03.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தரசி

**லலிந்தினி கிருஷ்ணதாசனின்**

வாழ்க்கை பாதிவழியில் வாழ்க்கை
வட்டத்தை விட்டு வானுலகு ஏகியதால்
சொட்டத்தான் செய்யும் கண்ணீர்.
துடைப்பவர் யார்?
சொல் இறைவா!

**பெற்றோர், கணவன், மகள்,
சகோதரன், மைத்துனர்கள்,
மைத்துனி, குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவயம்



அன்னை மடியில்
23.02.1977

ஆண்டவன் அடியில்
28.02.2007

காலஞ்சென்ற

# திருமதி. லலிந்தினி கிருஷ்ணதாசன்

## திதிவெண்பா

சீர்பூத்த விய ஆண்டு மனநிறை மாசிப்புதன்
பேர்பூத்த புனர்பூசம் சேர்ந்த துவாதசி திதியில்
பார்போற்றும் கந்தசாமி பெற்ற நல்லாள் லலிந்தினி
அடைந்தார் கொல்லங்கலட்டி விநாயகர் பாத மலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி லலிந்தினி கிருஷ்ணதாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

சீருறு இலங்கைத் தீவின் வடபால் ஏருறத் திகழும் இனிய பதியான யாழ் குடாநாடு என எவரும் இயம்பும் அதனில் வடபால் அமைந்திடும் ஆலயம் வீரகத்தி விநாயகர், மாவைக் கந்தன், நகுலேஸ்வரம் அருள்தர சிறந்து நடுவென திகழும் கொல்லங்கலட்டி பதியில் உயர் வேளாண் குடிதனில் உதித்த நன்மகன் நரசிங்க முதலி வழிவந்த வண்மைமிக்க கந்தவனம் மூத்ததம்பியும் அம்பலம் இராமாசிப்பிள்ளையும் பெற்ற நல்மனிதன் கந்தசாமியுடன் (செல்லர்) உடன் பிறப்புக்களாக நடராசா, தெய்வநாயகி, சுப்பிரமணியம், சகுந்தலாதேவி ஆகியோர் பிறந்தனர். இவர்களில் மூன்றாவதாக உதித்த கந்தசாமி என்பவர் ஆதிமயிலிட்டி பூதப்பிள்ளை காசிநாதரும் அவர் தம் மனைவி நன்னிப்பிள்ளையும் பெற்றெடுத்த நற்புத்திரி சுலோஜினி என்பவரை மணந்தார். சுலோஜினியுடன் உடன் பிறப்புக்களாக சறோஜினி ஸ்ரீரங்கநாதன், ருக்மணிதேவி, மனோகரி, கணேசலிங்கம் ஆகியோர் பிறந்தனர்.

கந்தசாமி-சுலோஜினி தம்பதிகளின் இல்லற வாழ்க்கையின் பயனாக 1971ம் ஆண்டு கௌரிதரனும் 1977ம் ஆண்டு லலிந்தினியும் பிறந்தனர். லலிந்தினி தனது ஆரம்ப கல்வியை தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியிலும் பின்னர் உயர்தர கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்று தேர்ந்தார். நாட்டுப் பிரச்சனை காரணமாக சுன்னாகத்தில் இடம்பெயர்ந்து சில காலம் வாழ்ந்து பின்னர் கொழும்பில் வந்து வாழ்ந்தார். இவர் சோளங்கன், கரணவாய் தெற்கு கந்தையாபிள்ளை (இரத்தினவாத்தியார் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவரும், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை ஸ்தாபகரும், கரணவாய் மூத்தவிநாயகர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைக்குழி முருகன் ஆகிய தேவஸ்தானங்களின் தர்மகர்த்தாவும் பொன்னுடையார் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட வருமான திரு.கணபதிப்பிள்ளை பொன்னம்பலத்தினதும் வள்ளியம்மைப்பிள்ளையினதும் கனிஷ்ட புத்திரனாவார்.) பொன்னம்மா (சோளங்கன் கரணவாயைச் சேர்ந்த சரவணமுத்து விதானையார், கதிராசிபிள்ளை தம்பதியினரின் ஏகபுதல்வியாவார்.) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனான கிருஷ்ணதாசன் அவர்களை 2003ம் ஆண்டு மணந்து 2004ம் ஆண்டு புஷ்பவி என்னும் அருந்தவப் புத்திரியைப் பெற்று இனிது வாழ்ந்து வந்தனர்.

இவர் 2007ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதி (28.02.2007) கணவரையும் ஏக புத்திரியையும் மனங்கலங்கவிட்டு திடீரென இரவு 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

இவரின் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.



* அகத்திற் தூய்மையுடையோன், புறத்தில் அசுத்தமாய் இருக்கமாட்டான்
தன்னையடக்கியாள முடியாதவன் பிறரையடக்கியாழுதல் முடியாத காரியம்
- காந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சகோதரன் - கௌரிதரன் (Bsc. Eng)**

இவர் சிங்கப்பூரில் பொறியியளாலராக Ingram Micro Asia Ltd. என்ற நிறுவனத்தில் கடமையாற்றுகிறார். இவர் பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. ஜெயராம் (Manager, Royal Hospital, Wellawatte) திருமதி ஜெயராம் தம்பதியினரின் புத்திரி யசோதாவை (கணக்காளர்) மணந்து ஷரனி என்ற பெண் குழந்தையை பெற்று இன்புற்று வாழ்கின்றனர்.

**மைத்துனர் / மைத்துனி**

1. **பொன்னம்பலதாசன் (B.Sc)**

இலண்டனில் கணணி பயிற்றும் ஆசிரியராக கடமையாற்றுகிறார். இவர் காலஞ்சென்ற தொழில் நுட்பவியலாளர் திரு. குமாரகுலசிங்கம் திருமதி குமாரகுலசிங்கம் தம்பதிகளின் புதல்வி வரதராணியை மணந்து

i. செல்வி ஜனனி

ii. செல்வி ஆரணி

ஆகியோரை தவக்குழந்தைகளாக பெற்று இன்புற்று வாழ்கின்றனர்.

2. **கணேசதாசன் (B.A)**

இலண்டனில் Management Accountant ஆக கடமையாற்றுகிறார். இவர் காலஞ்சென்ற புவனேந்திரன் திருமதி. புவனேந்திரன் தம்பதிகளின் இரண்டாவது புதல்வி சுபோதினியை மணந்து

i. செல்வி சானிதா

ii. செல்வி யானுஷா

ஆகியோரை தவக்குழந்தைகளாகப் பெற்று இன்புற்று வாழ்கின்றனர்.

3. **தேவராணி**

இவர் காலஞ்சென்ற இரகுநாதன் (Accountant-Mackwoods Ltd) திருமதி. இரகுநாதனின் மூத்த புதல்வரான லண்டனில் கணக்காளராகக் கடமையாற்றும் நிரஞ்சனனை மணந்து

i. செல்வன் ராகுல்

ii. செல்வன் கிஷான்

ஆகியோரை தவக்குழந்தைகளாகப் பெற்று இன்புற்று வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Resume
# Late Mrs. Lalinthini Krishnathasan

In the North of Sri Lanka, in "Valikaaman West" in a village called Kollankaladdi with 'Veerakaththi Vinayagar' as their 'Kula Theivam' surrounded by 'Maavaikkanthan' and 'Naguleswaram' temples lived Kanthavanam Moothathamby a descendant of Narasingha Mudali who married Raamaasipillai and were blessed with five children. Their third son Kandasamy (Valuation Inspector) married Sulojini daughter of Poothappillai Kasinathar and Nannipillai of Aathi Myliddi and were blessed with two children Gowritharan, an Engineer and Lalinthini. Lalinthini had her primary education at 'Thanthai Selva' Primary School at Thellipallai and continued her higher eduction at Union College, Thellipallai. Due to the disturbances in the North the family moved out to Chunnakam for sometime and then to Colombo. In the year 2003 she married Krishnathasan (MTV, Colombo), son of the late Mr. Ponnambalam Kandiapillai (Rathna Vathiyar) and the late Ponnamah and a grandson of Kanapadhippillai Ponnambalam, well known as "Ponnudaiyar" who was the trustee of Karanavai Moortha Vinayagar Temple and Muthalaikuli Murugn Temple and founder of Ponnambalam Vidyalayam, Karanavai and Valliamaipillai and of Saravanamuthu Vithanayar and Kathirasipillai of Solankan, Karanavai South, Karaveddi. They were blessed with a daughter Pushpavie.

She left us so suddenly on the night of 28th February 2007. Her demise has brought a void in our home.

May her soul rest in etemal peace



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BROTHER

**Gowritharan (BSc. Eng)**

*Engineer, working at Ingram Micro Asia Ltd. in Singapore, married to Yasotha (Accountant), daughter of Mr. Jeyaram (Manager, Royal Hospital, Wellawatte) & Mrs. Jeyaram of Pannalai, Thellipallai and blessed with a daughter Sharane.*

## IN LAWS

**1. Ponnambalathasan (B.Sc)**

*Computer lecturer in London married to Varatharani daughter of the late Kumarakulsingham, Technical Assistant and the late Mrs. Kumaralulasingham. They have two daughters Janani and Arani.*

**2. Ganeshathasan (B.A)**

*Management Accountant, married to Subothini, the second daughter of the late Puvanendran and Mrs. Puvanendran. They have two daughters Shanitha and Janusha.*

**3. Thevarani**

*She married Niranchanan, (Accountant London) the eldest son of the late P. Ragunathan, former Accountant, Mackwoods Ltd and Mrs. P. Ragunathan. They have two sons Raahul and Kieshan.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சைவத்திருமுறைகள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபு ரத்தை உகந்தனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனோடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

### ஆசிரியப்பா

### திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த தூரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூசிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்த

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிநை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
கலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிடமென்ன
அரள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிகங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.



* தேகம் இருக்கும் வரை சுகதுக்கங்கள் இருக்கும்.
இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.
தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.

(சுவாமி சித்பவானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

**கலிவெண்பா**

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாத இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவுறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்(கு) உதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட,
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கஎன் உவந்து
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீ(று)இடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரஹண பவனார் சடுதியில் வருக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறனெ
வசர ஹணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்(டு) ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க,
விரைந்(து) எனைக் காக்க வேலோன் வருக,
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்(று) என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும், பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணி சுட்டியும்,
ஈராறு செவியில் இலகு குண்டலமும்,
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி(று) உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும், இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொழி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும், கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்(து) இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார், திருவேல் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கதிர்வேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்,
எல்லிலும், இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்,
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதார் எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டு
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு,
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி,
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலைவெருண்டது ஓட,
புலியும் நரியும், புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்(து)ஓடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் சூன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன், கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை, பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட, நீ எனக் கருள்வாய்,
ஈரேழு உலகமும், எனக்குற வாக,
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்,
உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை, கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ், சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க, யானுனைப் பாட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக,
ஆடினேனாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பறந்து நீங்கி
உன்பதம் பெறவே உன்அருள் ஆக,
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக, வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்,
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் செய்தே யிருப்பினும்
பெற்றவன் நீ குரு, பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள், பெற்றவ ளாமே,
பிள்ளை யென்(று) அன்பாய்ப் பிரிய மளித்து,
மைந்தனென் மீது உன் மனமகிழ்ந் தருளித்,
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்,
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய,
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர், செயல தருளுவர்,
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்,
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்,
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்,
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெறிண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்,
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்(து) எனது உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்,
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்,
இருபத் தெழுவர்க்(கு) உவந(து) அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்(கு) ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலதெய்வம் காசிபூதவராயராலயம்

பேசுபிர பஞ்சமே மெய்பிரமம் பொய்யெனும்
பேதையோ காய னோடு
பிரமமே மெய்வெறும் பொய்தோற்ற முலகெனும்
பேதவே தாந்தி நிற்கத்
தேசுபெறு சிவனுமெய் சிவனையறி காறுமச்
சிவனருளி வுலகு மெய்யென்
சித்தாந்த சைவநெறி வித்தாகி விளைவான
சிவனருள் போற்றி செய்வாம்
மூசுகர நீட்டயம் முதுகங்கை புனிதநீர்
முன்னவ னெடுத்து வார்ப்ப
முற்றத் திருந்தன்னை முகிழ்கருணை நீராட்டி
முச்சிநீ ரூதி யொற்றி
வீசுபுகை யூட்டிவெண் பொடிதிமிர்ந் தணிசெய்து
மேவுமிறை பிறைநி லவினில்
மெல்லென நிமித்தழகு பார்திட விளங்கிவளர்
சிவபூதவராயரே காக்க வென்றே.

## கொல்லங்கலட்டி விநாயகர்

தீராதவினை தீர்க்கும் சித்தி புத்தி பாகன் எனத் தேடி வந்தே
ஆராத காதலுடன் அடிபணிவார்க்கருள் கொல்லங்கலட்டி ஐயா
வாராத செல்வமெல்லாம் வருவிக்கும் வரதனும் நீ வணங்கி வாழ்த்தும்
சீரா மெய்யன்பர் சிந்தனையை நிறைவேற்றும் தேவா போற்றி
எண்ணிய நற்கருமமெலாம் எழிதாகச் சித்தியுறும் எழிலார் கொன்றை
விண்ணுயரும் வில்வ நெல்லி மேவு கொல்லங்கலட்டி மேவும்
பண்ணவனார் ஐங்கரனை பாகமுறும் தேவியுடன் பணிவார்க்கென்றும்
திண்ணிய வெம் பகை பாவம் செறிபிணியும் தீர்த்திடும்
கொல்லங்கலட்டி ஐயா உன்பாதம் சரணம் ஐயா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைக் கந்தன்

ஓங்கார நாதமா யுள்ளூற் றுயிர்த்துவரு
மொருஞான விளைவ தாகி
உலகறிய நிகழ்கின்ற உற்பத்தி வடிவெலா
மொருதனது வடிவமாகி
நீங்காது மனசுபுரி சங்கற்ப மெழுதொறும்
நேர்நின்று விக்ன மாற்றி
நினைவினூ டொளிர்கின்ற நின்மல விநாயகனை
நித்தலும் பத்தி செய்வாம்
ஆங்கார மானவச் சூரனையு மயில்விட்
டழித்தவ னுளங்கி ழித்தே
யண்டருங் கொண்டாட வாடலொரு கூவல்புரி
யானந்த வடிவ மருளும்
பாங்கான வண்ணவைப் பழைமைதிகழ் மாவையம்
பதியுற் றமர்ந்த கோவைப்
பைந்தமிழ்க் குருவனைப் பரவுபிள் ளைத்தமிழ்
பண்புற் றிலங்க வினிதே.

## புகுந்த இடத்து தெய்வமாகிய பெரியவள்

திரிசூலம் தன்னைக் கரதவம் கொண்டருள் தேவியாரே
பரிந்தருள் பாலித்து வேண்டுவ ஈயும் பராபரியே
பெரிதாக நித்தம் தொழுநிய மத்தர் பிரிய அன்னை
பிரிந்து அடைந்தனர் நின்பதம் சாரப் பெரிதருளே

## நரசிம்ம வைரவர்

நெஞ்சினைப் பரியவன் மீது போன்றிலும்
வஞ்சனப் புகையென வால மாமன
செஞ்சட நரசிம்ம வைரவர்
காலடி போற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Chithi,

We were deeply sorry when we heard you had left us so suddenly. We don't know what to say. We were utterly upset. You will not be forgotten. We will always remember your smile, your laugh and most importantly the love and kindness you showed us all. A beautiful person you were.

We will always be here for chithappa and darling Pushpavie. You will always be in our heart and remain a part of us through spirit and be a guiding force and looking over us especially chithappa and Pushpavie.

***Janani & Aarani***



* There are loyal hearts
There are spirits breave, and
There are some that are pure and true.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Chiththi

We saw you as a radiant bride
Just a few years back
The telephone conversations made up
"Though not fully"
For not seeing you for sometime
We are sad
Kunchu Chittappa and Pushpavie are sad
Why did you leave us all, so suddenly
We will not see you again
We pray to God
To keep you well

***Your Loving nieces***
***Shanitha & Janusha***

# Dear Mami

We are stunned
We are shocked
A nightmare of eddying thoughts
Happy remembrances
Nostalgic memories
We will cherish baby Pushpavie
Don't worry, we will take care of her
Your picture will be kept alive
We will miss you
Will you come back !!!

***Your loving nephews***
***Raahul & Kieshan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

நானிலம் யாவும் ஓர் நாடக சாலையே ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர்தாம் மறைவும் தோற்றமும் மற்றவாக்கிங்குன என்பதற்கிணங்க உரிய காலத்தில் மணவினை ஆற்றி "மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன் மக்கட் பேறு "என்பதற்கமைய, புஷ்பவி என்னும் புதல்வியைப் பெற்றெடுத்து, அதன் மழலைச் சொற்கேட்டு மகிழ்வுறும் காலத்தில் மின்னல் போல் மறைந்து விட்டார் மருகி லிலிந்தினி அவரின் திடீர் மறைவு நடுநிசியில் எங்களை திடுக்குறச் செய்து விட்டது. மனத்தாலும் எண்ணமுடியாத இத்துன்ப நிகழ்ச்சி எங்கள் அனைவரையும் ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டது. செய்வதறியாது திகைத்தோம், எண்ணி எண்ணி உள்ளம் உருகினோம் எதிர்பாராத இந்நிகழ்ச்சி எங்கள் உள்ளத்தை உலுக்கிவிட்டது. இன்றும், என்றும் மறக்கமுடியாத ஒரு மாபெரும் துக்க நிகழ்வாகி விட்டது. எங்கள் சுற்றத்தில் ஒரு சீரிய பெண்ணை, அன்பின் மிக்கவரை, இன்பவார்த்தையே என்றும் புகல்பவரை, அமைதி கலந்த வாழ்பினரை, சுற்றம் ஓம்பும் சீரிய பண்பினரை இன்று இழந்து விட்டோம். அவரின் அன்பகலாக கணவர் ஒரு சிறந்த மனைவியை இழந்தார், பிள்ளை புஷ்பவி அருமைத்தாயை இழந்தார், செல்லமாய் பெற்றெடுத்த தாய் தந்தையா அருமைப்புதல்வியை இழந்துவிட்டார்கள்.

அவரின் சின்னமாக அவர் பெற்றெடுத்த தெய்வக் குழந்தையின் மழலைச் சொற்கேட்டு, கூடிக்குலாவி மன அமைதி அடைவோமாக.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே
உடம்போடுயிரிடை நட்பு"

என்னும் வள்ளுவரின் தெய்வ வாக்கினை உளங்கொண்டு திருவருட் செயற்பாட்டினை ஏற்று மனச்சாந்தி அடைவோமாக

சுற்றத்தைப் பேணிய நம் சுடர்வாழ்வு மங்கியதோ!
குற்றத்தைப் பொறுத்திடு நம் குண வாழ்வு மங்கியதோ!
பற்றற் றோர் தமக்கன்பு பற்றியுதவிய மங்காய்!
தித்திக்கும் இல்லாவழ்வை தீதென்று மறைந்தீரோ
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பொ. நவரத்தினம் (மாமா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

என் அன்பின் உடன்பிறவா சகோதரியே! உன் திடீர் மறைவு எனது உள்ளத்தை உலுப்பியபடியே இருக்கின்றது. நின்றும் இருந்தும், கிடந்தும், நடந்தும் உன் நினைவே என் மனத்தில் குடிகொண்டுள்ளது. நீ வயதில் இளையவளானாலும் சென்ற சிலகாலமாக எனது வாழ்விலும் தாழ்விலும் உறுதுணையாக இருந்தாய்; நானும் அப்படியே. கூடப்பிறந்த சகோதரிபோல் என்னுடன் பழகுவாய். தேவைப்படும் போது தொலைபேசியில் இரவு பகலென்னாது சம்பாஷிப்பாய் உன் செல்வப்புதல்வி புஷ்பவியை தவிக்க விட்டு சடுதியில் பிரிந்ததின் காரணம் ஏதோ? தங்கள் பிரிவு என் உள்ளத்தைச் சுடுகின்றது. உணர்வை அழிக்கின்றது; செய்வதறியாது சிந்தை தடுமாறுகிறது. அருமைத் திருமுகம் என் மனக்கண்முன் வருகிறது, மணி மொழிகள் காதுகளில் ஒலித்தபடியே இருக்கின்றன.

நீ பெறுதற்கரிய பிள்ளையை (புஷ்பவி) பிரிந்தாய் வாழ்கைத்துணைவனை பிரிந்தாய், பெற்றெடுத்த தாய், தந்தையரைப்பிரிந்தாய், உடற்பிறப்பு ஒரே ஒருவரை பிரிந்தாய் சுற்ற மித்திரார்களைப் பிரிந்தாய் காரணம் ஏதோ? கடவுளைத்தான் கேட்கவேண்டும்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

என்னும் வள்ளுவர் வாக்குக்கமைய, மனம் சாந்தி அடைவோமாக.

மறைந்துவிட்டீர், எம்மையெல்லாம், மறந்துவிட்டீர், இறைவனடி சேர்ந்து விட்டீர், இனி உமக்குப் பிறப்பில்லை. உமது ஆத்மா சாந்தியடைய பிரார்திப்போமாக.

***வதனி அக்கா (மைத்துனி)***
*அரசதொடர்மாடி, பம்பலபிட்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

முத்துப்பற்கள், மோகனப் புன்நகை
குறும்பாகப் பேசி எம்மை மகிழ்வித்த
திருமகள் நிகர்த்த லலிந்தினியே!
காலன் விரித்த பாசக்கயிற்றை
பெரிதென மதித்தோ சென்று விட்டாய்?
காற்றில் உதிர்ந்த ரோஜா மலராய்
நீ வாடியது என்ன?
எம்மை வாட்டியது என்ன?

அன்புக் கணவன், ஆசைக் குழந்தை,
பாசத்தைப் பொழிந்து வளர்த்த பெற்றோர்,
ஓடி விளையாடிய உடன்பிறப்பு,
உடன்பிறவாப் பிறப்புக்கள்,
அனைவரையும் பிரிந்து மறைந்த மாயத்தை
விதியென நினைத்து, வெதும்பி நிற்கின்றோம்
மீளாத்துயிலில் நீ ஆழ்ந்து விட்டாய்!
சிவபதம் அடைய வேண்டி நிற்கின்றோம்.

***தேவி அக்கா (மைத்துனி)***
***சிட்னி, அவுஸ்ரேலியா.***



* பிறப்பு உண்டானபோதே இறப்பு நிச்சயமாகின்றது.
மரணம் தவிர்க்க முடியாதது.
மரணத்தைக் கண்டு அஞ்சப்படாது.
மரணம் வரமுன் இறைவனுடைய சரணம் பெறவேண்டும்.

**- கிருபானந்தவாரியார் சுவாமிகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம் (வேறு)

“எல்லாம் மிங்கோர் சூதாட்டம்
என்றே சொன்னான் பெரும்புலவன்
நல்லார் ஒருவர் மறைவதில்லை
நன்மை என்றும் அழிவதில்லை
சொல்லால் மனத்தால் பண்பாலே
தூயனள் செல்வி அவள்
நல்லாள் லலிந்தினி நம் மனதில்
நாளும் வாழ்வாள் தேறிடுவோம்.”

* உலகத்தில் எதுவும் நிச்சயமல்ல, ஆனால் மரணம் நிச்சயம்.
துன்பத்தில் இருந்து விடுதலைபெறப் பிரார்த்தனை செய்யாதே,
ஆனால் துன்பத்தை சகிப்பதற்கு, தாங்குவதற்கு சக்தி வேண்டுமென்று
பிரார்த்தனை செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * * * *

பிறப்பும், இறப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றனவல்லவா? ஒரு பக்கத்தில் இறப்பும், மறுபக்கத்தில் பிறப்புமுளதாகும். இப்படிவரும் பிறப்பிற்கு ஏன் துன்புற வேண்டும்? அல்லது ஏன் இன்புற வேண்டும்?

* * * * *

இக் கருத்துச் சரியாயின் சந்தேகம் யாது மின்றிச் சரியே-இறப்புக்கு யாம் சற்றும் அஞ்சலாமா, அல்லது துன்புறலாமா, அல்லது பிறப்பில் இன்புறலாமா? ஒவ்வொரு மனிதனும் இக்கேள்வியைத் தான் தன்னையே கேட்க வேண்டும்.

* * * * *

உலகம் இன்பம், துன்பம்; நன்மை, தீமை, என்றின்னோரன்ன இரட்டைத் தன்மைகளால் நிரம்பியுள்ளது. இன்பத்தின் பின் துன்பமும், துன்பத்தின் பின் இன்பமும் மாறி, மாறி வருவன. ஒளி எங்கேயுளதோ அங்கே இருளும் உளது: பிறப்புளதாயின் இறப்பும் உண்டு. ஒன்றுக்கொன்று மாறுபாடான இவைகளால் தாக்குப்படாது வாழ்வதே பற்றற்ற வாழ்வாகும். இவற்றை யாம் அழித்தல்ல வெல்வது, இவைகட் கப்பால் மேலோங்கிச் சென்ற பற்றற்றிருத்தலே வெற்றியாகும்.

* * * * *

– மகாத்மா காந்தி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Lalintha**

In our Hearts your memory Lingers,
Always Tender, fond, and true;
Fondly remembered and sadly missed

*by*
*Family of Sivaraja*
*(Canada)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

சிவபதமடைந்த எமது குடும்பத்
தலைவியின் இறுதிச் சடங்குகளில்
நேரில் கலந்து கொண்டும்
மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி
செலுத்தியும் இரங்கற் செய்திகள் அனுப்பி
வைத்து அனுதாபம் தெரிவித்தும் பல்வேறு
வகைகளில் உதவி, ஒத்துழைப்பு நல்கியும்,
அந்தியேட்டிக் கிரியைகளின் போது
சமூகமளித்துப் பங்குகொண்ட உற்றார்,
உறவினர், நண்பர்கள் யாவருக்கும்,
இம் மலரை உரிய நேரத்திற்கு அச்சேற்றி
தந்த அச்சகத்தினருக்கும் எங்களது
மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

72-2/1, 37வது ஒழுங்கை,
கொழும்பு - 06.
15.03.2007

பெற்றோர், கணவன், மகள்,
சகோதரன், மைத்துனர்கள்,
மைத்துனி, குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ACKNOLEDGEMENT

*The family members of the late Mrs. Lalinthini Krishnathasan express their sincere thanks to their many relations and friends, who shared their grief by their gracious presence and by sending messages of sympathy and floral tribues. They acknowledge with sincere gratitude the willing assistance given by all at this time of grief. They also express their grateful thanks to all those who participated in the "Anthishasti" and connected ceremonies.*

*72-2/1, 37th Lane,*
*Colombo – 06.*
*15.03.2007*

*Parents, Husband, Daughter,*
*Brother & Family,*
*In Laws & Family.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாக்குவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

Fast Printers : 289-1/2, Galle Road, Colombo-06. 2362312, 071-6068427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org